*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*27 11 2025 THURSDAY 6 45 AM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. *காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி 2030ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

2. *நடப்பு நிதியாண்டு காரிப் பருவத்தில் உணவு தானிய உற்பத்தி 173 புள்ளி மூன்று மூன்று மில்லியன் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

3. *வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், தமிழகத்தில் இதுவரை 97 புள்ளி பூஜ்யம் நான்கு சதவீத விண்ணப்ப படிவங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

4. *தஞ்சாவூர். திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

5. *17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்துப் போட்டி, தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் சீன தைபே-யை வென்றது.*

*>>>>>><<<<<*

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி 2030ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அஹமதாபாதில் இப்போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, விளையாட்டுத்துறை மீதான கூட்டு உறுதிப்பாடு மற்றும் விளையாட்டு ஆர்வம் இந்தியாவை உலக அளவில் நிலைநிறுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*உலகம் ஒரு குடும்பம் என்ற நெறிமுறையுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க விளையாட்டுகளை பெரும் உற்சாகத்துடன் கொண்டாட இந்தியா ஆர்வமுடன் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*இப்போட்டிக்காக உலக நாடுகளை வரவேற்பதை இந்தியா எதிர்நோக்கி இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.*

குடியரசு தணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் விளையாட்டுச் சூழலில், கூட்டு வலிமை, திறமை ஆகியவற்றை இது பிரதிபலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் இணையற்ற அர்ப்பணிப்பு மற்றும் உலக அளவில் விளையாட்டுத் துறையில், நாட்டின் வளர்ந்து வரும் சூழலை இது எடுத்துக் காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் திறன், ஒற்றுமை, விருப்பங்கள் ஆகியவற்றை உலக அளவில் வெளிப்படுத்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை இது வழங்கியுள்ளதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ரா, குஜராத் மாநிலங்களில் நான்கு மாவட்டங்கள் பயன்பெறும் வகையில், பல்தட ரயில்வே திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், 2 ஆயிரத்து 781 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்தின் மூலம், அப்பகுதியில் உள்ள 585 கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி மேம்படும் என்று கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நடப்பு நிதியாண்டு காரிப் பருவத்தில் உணவு தானிய உற்பத்தி 173 புள்ளி மூன்று மூன்று மில்லியன் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிக்கையை வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வெளியிட்டுள்ளார்.

அரிசி உற்பத்தி 124 மில்லியன் டன் அளவிற்கும், கரும்பு உற்பத்தி 475 மில்லியன் டன் அளவிற்கும், தானியங்கள் உற்பத்தி 41 புள்ளி நான்கு ஒன்று மில்லியன் டன் அளவிற்கும் இருக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், தமிழகத்தில் இதுவரை 97 புள்ளி பூஜ்யம் நான்கு சதவீத விண்ணப்ப படிவங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இவற்றில், 65 புள்ளி நான்கு இரண்டு சதவீத படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் 96 புள்ளி மூன்று இரண்டு சதவீத விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் 71 புள்ளி பூஜ்யம் ஆறு சதவீத விண்ணப்பங்கள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ராமேஸ்வரம் - திருப்பதி இடையே இருமாரக்கங்களிலும் அடுத்த மாதம் சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி, ராமேஸ்வரத்திலிருந்து திருப்பதிக்கு அடுத்த மாதம் 2 மற்றும் 9ஆம் தேதிகளில் மாலை மணி 4.30-க்கு இயக்கப்படும் என்று கூறியுள்ளது.

மறுமார்க்கத்தில் வரும் 3 மற்றும் 10ஆம் தேதிகளில் திருப்பதியிலிருந்து காலை மணி 11.55-க்கு புறப்படும் என்று தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<

விழுப்புரம் மாவட்டத்தில், அடுத்த மாதம் 13ஆம் தேதியன்று, மக்கள் நீதிமன்றம் மூலம் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விசாரணை நடைபெறவுள்ளது.

இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விழுப்புரம் சட்டப்பணிகள் ஆணையக் குழு கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சுரேஷ் 36 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

நாட்டின் அரசியல் சாசனத்தின் நெறிமுறைகளை பின்பற்றுவது அனைவரின் கடமை என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசன தினத்தை ஒட்டி, உச்சநீதிமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், அரசியல் சாசனம் வேற்றுமையில் ஒற்றுமை என்பதற்கான ஆதாரம் என்று குறிப்பிட்டார்.

அரசியல் சாசனம் குறித்து எதிர்கால தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில். குழந்தைகளுக்கு அதுகுறித்து ஆர்வமூட்டும் வகையில் தகவல்களை அளிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

உலக மீன்வள தின கொண்டாட்டத்தை ஒட்டி, மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநிலத்தின் சிறந்த உள்நாட்டு மீன்வளர்ப்போர். சிறந்த வண்ண மீன் வளர்ப்போர், கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன்வளர்ப்போர், சிறந்த மேலாண்மை நடைமுறைகளை பின்பற்றும் மீன்பிடி துறைமுகம், சிறந்த கூட்டுறவு சங்கம் மற்றும் சிறந்த விற்பனையாளர் ஆகிய பிரிவுகளின் கீழ் அமைச்சர் விருதுகளை வழங்கினார்.

>>>>>><<<<<<

தஞ்சாவூர். திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

ஹாங்காங்கில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44-ஆக அதிகரித்துள்ளது.

>>>>>><<<<<<

பிரான்ஸ் முன்னாள் அதிபர் திரு. Nicoles Sarkozy தேர்தல் பிரச்சாரத்தின் போது முறைகேடாக நிதியை பயன்படுத்தியதற்காக, விதிக்கப்பட்ட சிறை தண்டனையை அந்நாட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

>>>>>><<<<<<

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனாவை நாடு கடத்துமாறு பங்களாதேஷ் விடுத்துள்ள கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை துறைமுக ஆணையத் தலைவர் திரு. சுஷாந்த்குமார் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

*கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் ஆய்வு செய்தார்.*

>>>>>><<<<<<

*நெல்லையில் 183 ஆண்டுகால பழமைவாய்ந்த சுலோச்சன முதலியார் பாலத்தில் சுவரொட்டிகள் மற்றும் சுவர் விளம்பரங்கள் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகராட்சி எச்சரித்துள்ளது.*

>>>>>><<<<<<

*ராமேஸ்வரம் கோவிலில் கடந்த 20 நாட்களில் உண்டியல் வருமானம் மூலம், ஒரு கோடியே 8 லட்சம் ரூபாய் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>><<<<<<

*மயிலாடுதுறை அருகே, 21 சவரன் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.*

>>>>>><<<<<<

*சென்னையில் உள்ள சமூகநீதி விடுதிகளில் பயிலும் மாணவியர்களுக்கு கராத்தே, சிலம்பம் பயிற்சி அளிக்க, பயிற்சி நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.*

>>>>>><<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

*17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்துப் போட்டி, தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் சீன தைபே-யை வென்றது.*

*அஹமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் இந்திய அணியின் கேப்டன் Dallalmuon Gangte ஹாட்ரிக் கோல் அடித்தார்.*

*இந்தியா தனது அடுத்த ஆட்டத்தில் நாளை லெபனானை எதிர்கொள்கிறது.*

>>>>>><<<<<<

*சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் H.S. Prannoy காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 21-15, 21-10 என்ற செட்கணக்கில் சகநாட்டு வீரர் Dalal Shashwat-ஐ வென்றார்.*

>>>>>><<<<<<